# இலங்கை சட்டக் கல்லூரி சாதாரண அனுமதி பரீட்சை

## 2025 ஆம் கல்வியாண்டுக்காக மாணவர்களை அனுமதித்தல்

இலங்கை சட்டக் கல்லூரிக்கு 2025 ஆம் கல்வியாண்டுக்காக மாணவர்களை அனுமதிப்பதற்காக நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரிகளிமிருந்து நிகல்நிலை ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணைய தளத்தில் **"Our Services"** இன் கீழ் உள்ள **"Online Applications – Recruitment Exams"** நிகல்நிலை ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது நிகல்நிலை ஊடாக மாத்திரமேயாகும். நிகல்நிலை விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 ஜூலை 29 ஆம் ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

**நிகல்நிலை** விண்ணப்பப் பத்திரம் ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்பப்பட வேண்டும். **நிகல்நிலை** விண்ணப்பப் பத்திரத்தை நிரப்புவதற்கு முன்னதாக, பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள பணிப்புரை படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பும் போது அந்த பணிப்புரைகளை கட்டாயமாக பின்பற்றவும். பூரணமற்ற விண்ணப்பப் பத்திரங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

### அனுமதிக்கான தகைமைகள்

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02. விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேளையில் வயது 17 வருடங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (அதன்படி 2007.08.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிறந்த திகதியை உடையவர்கள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்கலாம்.)

03. (அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நாடத்தப்படும் இலங்கை கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் அல்லது

    (ஆ) ஐக்கிய இராச்சிய கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு திறமை சித்திகளும், ஒரு சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்,

04. இலங்கை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் / தேசிய பொதுத் தராதர பரீட்சையில் அல்லது ஐக்கிய இராச்சிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமை சித்'தியும் மற்றும் சிங்கள அல்லது தமிழ் மொழியில் திறமை சித்தியும் பெற்றிருத்தல்.

05. மேற்படி 03, 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கு மாற்றாக கவனத்தில் கொள்ளப்படும் வேறு தகைமைகள் இருப்பின், அத்தகைய தகைமைகள்

    கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்வி சபையினால் வெளிப்படுத்தப் படுவதுடன், அதன்படி விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் முன்னர் 070-6759892 என்ற தொலைபேசி எண்ணில் விசாரணை செய்து, அதற்கான அனுமதியை இலங்கை சட்டக் கல்லூரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

## அனுமதிப் பரீட்சை

சகல விண்ணப்பதாரிகளும் 2024 நவம்பர் மாதம் நடாத்தப்படவுள்ள அனுமதி பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சட்டக் கல்லூரி அனுமதி பரீட்சைக்கான வினாப் பத்திரங்களாவன,

1. பொது அறிவு - காலம் 01 மணி. (அடைவு புள்ளிகள் – 40)
50 பல் தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
2. நுண்ணறிவு - காலம் 01 மணி. (அடைவு புள்ளிகள் – 40)
50 பல் தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
3. ஆங்கில மொழித் திறன் - காலம் 1½ மணி. (அடைவு புள்ளிகள் – 40)
4. சிங்கள அல்லது தமிழ் மொழித் திறன் - காலம் 1½ மணி. (அடைவு புள்ளிகள் – 40)

பாடம் இலக்கம் 03 மற்றும் 04க்கான வினாத்தாள்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய 05 கேள்விகளைக் கொண்டிருக்கின்றன. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

- 50 வசனங்களைக் கொண்ட கட்டுரை/பயிற்சி ஆவணம்
- சுருக்கம்
- சொற்களஞ்சியம்/சொல்லகராதி
- இலக்கணம்/ஒத்த கருத்துச் சொற்கள்/ எதிர்ச்சொற்கள்
- புரிதல்/பந்தி சார்ந்த வினாக்கள்

விண்ணப்பதாரிகள், பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு ஆகிய வினாப் பத்திரங்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஏதாவதொரு மொழியில் விடை அளிக்கலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட வினாப் பத்தரங்களில் ஒன்றில் அல்லது அதற்குக் கூடியவற்றில் 40% க்குக் குறைவான புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் அனுமதிக்கான தகுதியைப் பெற மாட்டார்கள்.

தகுதி பெறும் விண்ணப்பதாரிகளைத் திறமையின் அடிப்படையில் அனுமதிக்காக தெரிவு செய்யும் போது, பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு ஆகிய வினாப் பத்திரங்களுக்கு பெற்றுக் கொண்ட புள்ளிகள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படும்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட முடியாது.

## பரீட்சை கட்டணங்கள்

(அ) கவனிக்க – விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டியது நிகல்நிலை ஊடாக மாத்திரமே.

(அ) பரீட்சைக் கட்டணம் ரூ.1200/= மட்டுமே. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகல்நிலைத் தொகுதியினால் வழங்கப்படும் கீழ் வரும் செலுத்தல் முறையின் கீழ் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும்.

1. எந்தவொரு வங்கிக் கடன் அட்டையின் மூலமாக (Any Bank Credit Card)
2. வலைப்பின்னல் செலுத்துகை வசதி கொண்ட எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலமாக (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

3. இலங்கை வங்கி நிகல்நிலை வங்கி முறைமை மூலமாக (Online Banking Method of Bank of Ceylon)

4. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையின் ஊடாக (Any Branch of the Bank of Ceylon)

- மேற்படி முறைகளில் செலுத்தும் விதம் பற்றிய பணிப்புரைகள் பரீட்சைகள் திணைக்களத்தின் வலைத் தளத்தில் பரீட்சை தொடர்பான தொழினுட்ப பணிப்புரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

- செலுத்துகை பெறப்பட்டுள்ளதைப் பற்றி குறுந்தகவல் (SMS) அல்லது இலத்திரனியல் அஞ்சல் ஊடாக அறிவிக்கப்கடும். பரீட்சைக் கட்டணத்துக்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டியதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது மேலதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட செலுத்துகை முறைகளின்படி கட்டணங்கள் செலுத்தப்படும் போது ஏற்படும் குறைபாடுகளுக்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

**சட்டக்கல்லூரிக் கட்டணமாகிய** ரூ.12,-000/=, ஹட்டன் நெஷனல் வங்கியில் (ஹல்ஸ்டோப் கிளையில்) கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்விச் சபையின் பெயரில் உள்ள 063020073300 கணக்கிலக்கத்திற்கு **விண்ணப்பதாரியின் பெயரில்** செலுத்திய பற்றுச் சீட்டை entrance@sllc.ac.lk **என்ற மின்னஞ்சலூடாக சமர்ப்பித்த பின்னர் மாத்திரம்**, தமது விண்ணப்ப படிவத்தை நிகல்நிலை ஊடாக பரீட்சை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். பற்றுச் சீட்டில் விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடனான பெயரும், தேசிய அடையாள அட்டை இலக்கமும், தொலைபேசி இலக்கமும் தெளிவாக கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும். (மேற்படி கட்டணத்தை முறையாக செலுத்தியிராமை / வேறொருவரின் பெயரில் பணம் செலுத்துதல் / விண்ணப்பதாரியினது அல்லாத தகவல்களை பற்றுச் சீட்டில் குறிப்பிட்டிருத்தல் போன்ற காரணங்களினால் விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்படும். மேலும், விண்ணப்பதாரி தமது பற்றுச் சீட்டை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

## பரீட்சை அனுமதி அட்டை

(1) நிகல்நிலை ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பதாரிகளினதும் விபரங்களும் (Submitted Applicants' Details) அடங்கிய மென்பொருள் பிரதியொன்று விண்ணப்பப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி தினத்துக்கு பிறகு பரீட்சைகள் திணைக்களத்தினால்இலங்கை சட்டக் கல்லூரிக்கு சமர்ப்பிக்கப்படும். சட்டக் கல்லூரியினால் அங்கீகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும் அதிகாரம் இலங்கை சட்டக் கல்லூரிக்கு உரியது.

(2) பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படுவது நிகல்நிலை ஊடாக மட்டுமே. பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவுடன், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அது பற்றி பத்திரிகை அறிக்கையொன்று வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத அபேட்சகர் யாருமிருப்பின், அது பற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஏற்பாட்டு கிளையில் விசாரணை செய்ய

வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை தொலை நகல் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு, தமது தொலை நகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதம் ஒன்றை, பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பரீட்சை அறிக்கையில் குறிப்பிடப்படும் தொலை நகல் இலக்கத்து அனுப்பி வைக்க வேண்டும்.

(3) விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதி செய்வதற்காக பின்வரும் ஏதாவதொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

01. தேசிய அடையாள அட்டை
02. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
03. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதி அட்டை

மேலும், விண்ணப்பதாரிகள் தமது அடையாளத்தை உறுதி செய்து கொள்ளும் விதமாக, முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறல்லாத அபேட்சகர்கள், பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரியை அடையாளம் கண்டுகொள்ளத் தக்கதாக முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

(4) அபேட்சகர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் அல்லது அவள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக் கொள்ளப்படுவதாக கருதப்படக் கூடாது.

(5) பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தமது கையொப்பத்தை உறுதி செய்து கொண்ட பரீட்சை அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

(6) பரீட்சையை நடாத்துதல், பெறுபேறு விநியோகித்தல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சை அபேட்சகர்கள்

கீழ்படிந்தவர்களாவர். அந்த சட்ட விதிகளை மீறினால், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.
கீழ் வரும் காரணங்களை முன்னிட்டு உங்களது விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்படலாம்.

**விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுதல்**

ஆதலினால், விண்ணப்பப் பத்திரத்தை அனுப்புவதற்கு முன்னர், இது பற்றி மிகவும் கவனம் செலுத்தவும்.

01. பூரணமற்றதும், பிழையானதுமான விண்ணப்பப் பத்திரம்.

02. ஒரு விண்ணப்பதாரியினால் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பித்திருப்பது.

03. சரியான சட்டக் கல்லூரி கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை மின்னஞ்சல் ஊடாக சட்டக் கல்லூரிக்கு சமர்ப்பிக்காமை.

04. சட்டக் கல்லூரியினால் கோரப்படும் போது கல்வி அத்தாட்சிப் பத்திரங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க தவறியமை.

05. விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேளையில், கல்வித் தகைமைகளை / ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்யாதிருத்தல்.

06. க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொ.த. (உயர் தரம்) பெறுபேறுகளுக்கு மேலதிகமாக இலங்கை சட்டக் கல்லூரியின் பரிந்துரை இல்லாமல் வேறு தகைமைகளின் மீது விண்ணப்பித்திருத்தல்.

**குறிப்பு**

- பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. அதே போன்று, உங்களால் செலுத்தப்பட்ட சட்டக் கல்லூரிக் கட்டணத்தை மீளக் கோர முடியாது.

- **போலியான தகவலுக்கான தண்டனை** - நிகல்நிலை விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பும் போது கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அதே போன்று, நிகல்நிலை விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிக்கும் போது, நிகல்நிலை தொகுதியினால் வழங்கப்படும் பணிப்புரைகள், நிபந்தனைகள் மற்றும் சட்ட விதிகளுக்கு விண்ணப்பதாரி உடன்பட வேண்டும். அவ்வாறு உடன்படவில்லையென தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடந்து கொண்டிருக்கும் போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய / அவளுடைய அபேட்சகர் அந்தஸ்த்து வலுவிழக்கச் செய்யப்படலாம்.

- சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிக் கூற்றுக்களுக்கு இடையில் ஏதும் பொருந்தாமை அல்லது ஒவ்வாமை நிலவுவதாக காணப்படின், அச்சந்தர்ப்பத்தில், சிங்கள மொழி மூலமான அறிவித்தலின்படி செயலாற்றப்படும்.

அதிபர்,
இலங்கை சட்டக் கல்லூரி,
ஹல்ஸ்டோப் வீதி,
கொழும்பு 12.